எம்.சி.ஓ.பி எண்: 4866,4868/2024 தேதி: 07.04.2026

மசா. : 1

பெயர் : குமார்

த/பெ. : தேவராஜ்

வயது : 66

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக காவல் துறையில் புகார் 18 நாட்கள் கழித்து கொடுக்கப்பட்டது என்றால் சரி. நான்தான் புகார் கொடுத்தேன். விபத்து ஏற்படுத்திய உடன் செஞ்சி அரசு மருத்துவமனையின் முதல் சிகிச்சை பெற்றேன். அதற்கான விபத்து பதிவேடு நகல் தாக்கல் செய்யவில்லை. ரூபாய் 2 லட்சம் பில் செலவானதாக பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தொடர்சிசிக்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் BSNL நிறுவனத்தில் ஓய்வு பெற்ற அதிகாரி என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் ஜெராக்ஸ் கடை நடத்தி வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 7,8 ல் கூறியுள்ள விவரங்களுக்கு ஆதாரவாக மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பத்தி 10,11,12 கூறியுள்ள விவரங்களுக்கு ஆதாரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய வருமான இழப்பை நிருப்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் சீட் பெல்ட் அணியாமல் காரில் சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.